# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAANS

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVI | YEAR OF OUR LORD JESUS CHRIST, JUNE 2021 | No. 7

## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**சங்கீதம் 8:1-9**

1. எங்கள் ஆண்டவராகிய **கர்த்தாவே,** உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.

2. பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

3. உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,

4. மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.

5. நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.

6. உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

7. ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும்,

8. ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

9. எங்கள் ஆண்டவராகிய **கர்த்தாவே,** உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது.

# பரிபூரண ஆசீர்வாதத்தால் நிறைந்திருங்கள்!

(தலைமைச் சபையில் போதகர் **எஸ். சாம் செல்வ ராஜ்** அவர்கள் அளித்த செய்தி)

**"...தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" எபேசியர் 3:19.**

**"நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைப்பெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்"** (எபேசியர் 3:16–19).

**"நாம் இனிக் குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்"** (எபேசியர் 4:14,15).

## கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் படி:




ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, சபை ஆராதனைகளில் பங்கு பெற்று தேவனுடைய பிள்ளைகளாக வளருவது கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல்படி. அநேக மக்கள் இந்தபடியோடு நிறுத்திக் கொள்ளுகிறார்கள். ஒரு கிறிஸ்தவனுக்கான எல்லா வெளிப்புற ஆசாரங்களையும் அவர்கள் கைக்கொள்ளுகிறார்கள். இது ஒரு சாதாரண கிறிஸ்தவ வாழ்க்கை. இப்படிப்பட்ட ஒரு சராசரி கிறிஸ்தவ வாழ்க்கை முற்றிலும் ஆபத்தானது.

நாம் குழந்தைகளைப்போலிராமல் தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது (எபேசியர் 4:15,16). ஆகவே நாம் வளர்ச்சியடைய வேண்டும். வளர்ச்சியில்லாவிட்டால் அழிவு ஏற்படுகிறது. தேவன் ஒரு மிகப்பெரிய நோக்கத்துடன் நம்மை

தொடர்ச்சி 3–ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

(ECHO GROUP)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



"... உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்."

(சங்கீதம் 65:4)



**OUR MISSION POLICY**
We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITORS**
Pastor S. Sam Selva Raj
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Bro. M. Paul Raj, M.A., B.Ed.
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.

**CORE ADVISORS**
Aud. K. Puratchivendan, M.Com., B.L.
Er. C.G.S. Babu Rao, B.Tech., M.Tech (DM)
Dr. S. Rabinder Boaz, M.S.
Dr. J.R. Jeyabalan
Adv. N. Balaji, B.Com., B.L.
Sis. Ajitha Mary, M.A.



**PUBLISHER, PRINTER & PROPRIETOR**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.Mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITE**
www.echoofhiscall.org /
www.echoofhiscall.com


**கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,**

தம்முடைய வார்த்தைகளினாலே அண்ட சராசரங்களையும் தமது ஆளுகைக்குள்ளாய் வைத்துக் கொண்டிருக்கும் நமது அன்புள்ள ஆண்டவரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவை நான் என் குடும்பத்தாரோடும், ஊழியர்களோடும் கைகோர்த்து துதித்து ஸ்தோத்திரிக்கிறேன்.

ஆம். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் தேவன் நல்லவராகவே இருக்கிறார். எதிர்மாறான எல்லா சூழ்நிலைகளிலும் அவர் எங்களையும் பாதுகாத்து, தேவைகளை சந்தித்து, அவரது பெலனால் எங்களை பெலப்படுத்தி வருகிறார். எங்கள் நெருக்கத்தின் நேரத்தில் எங்களோடு இருந்து எங்களை ஜெபத்தினால் தாங்கிய ஒவ்வொரு சகோதர, சகோதரிகளுக்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

இந்த மிகக் கடினமான ஊழியக் காலத்தில், "**அழைப்பின் எதிரொலி**" ஊழியத்தின் பல தேவைகளுக்காக முன் வந்து உதவி செய்து, ஜெபத்தினால் எங்களைத் தாங்கின ஒவ்வொரு சகோதர, சகோதரிகளுக்கும் நன்றியுள்ளவர் களாயிருக்கிறோம். பணியாளர்களின் சம்பளம் மற்றும் காகிதச் செலவுகள் போன்ற பல தேவைகளினால் மிகவும் நெருக்கப்படுகிறோம். மற்றவர்கள் யாரிடமும் எங்கள் பொருளாதாரத் தேவைகளுக்காக நாங்கள் எதுவும் கேட்பதில்லை. ஆனால் இந்த ஊழியத்தை நேசிக்கிற நபர்களிடம் மட்டும், உங்கள் காணிக்கைகளை "மணி ஆர்டர்", "காசோலை", NEFT, Paypal (Sam Selva Raj, sam@echoofhiscall.org), PhonePe (98410 71858), Googlepay (98410 71858), "Western Union", "MoneyGram" போன்ற வழிகளில் அல்லது வேறு ஏதாவது வழிகளிலோ அனுப்பி இந்த ஊழியத்தைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு நீங்கள் காணிக்கைகளை அனுப்பும்போது SMS, WhatsApp அல்லது தொலைபேசி மூலமாக எங்களுக்குத் தெரியப்படுத்தி விடுங்கள். இவ்வாறு எங்கள் ஊழியத்தைத் தாங்குகிற ஒவ்வொருவருக்கும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். கர்த்தர் உங்களை நிச்சயமாக ஆசீர்வதிப்பாராக.

நாங்கள் உங்களை மிகவும் நேசிக்கிறோம். எங்களோடு கடந்த 50 வருடங்களாக எங்களுடன் தொடர்பில் உள்ளதால் மகிழ்ச்சி அடைகிறோம். BIBLECOR என்ற தபால் வழி இறையியல் கல்வி, தொலைத் தொடர்பு இறையியல் கல்வி, நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், சபைகள் ஆகியவைகளைத் வசதிப்படி நடத்தி வருகிறோம்.

உங்கள் கடிதங்களை எதிர்பார்க்கிறோம். "**கர்த்தர் மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக்**


**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

**காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்"** (எரேமியா 17:7, 8).

COVID-19 என்ற கொள்ளைநோய் கடந்த முறையைவிட, இரண்டாம் அலையாக, மிகுந்த வீரியத்துடனும், அழிக்கக்கூடியதுமாய் மிகவும் வேகமாய்ப் பரவி வருகிறது. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளும் அதிகமாய் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வேதனையின் நாட்களில், இந்த கொள்ளை நோய் பரவுவதை தேவன் தடுப்பது மட்டுமல்லாமல், முற்றிலுமாய் நிறுத்திவிட ஜெபிப்பதைவிட வேறு ஒரு வழியும் இல்லை.

கர்த்தரின் செட்டைகளின் கீழ் தேவன் உங்களை பாதுகாக்க நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம். **"அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்"** சங்கீதம் 91:3. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**பாஸ்டர் எஸ். சாம் செல்வ ராஜ் &**
**அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858
E.Mail : samselvaraj333@gmail.com

⁂ ⁂ ⁂ ⁂ ⁂ ⁂ ⁂ ⁂ ⁂ ⁂

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

அழைத்திருக்கிறார். அவர் ஒரு பெரிய கூட்ட மக்களை அழைக்கவில்லை. ஆண்டவர் ஒரு சிறிய கூட்ட மக்களைத் தெரிந்தெடுத் திருக்கிறார். அவர் உங்களையும் என்னையும் ஒரு பெரிய எழுப்புதல் பெற்றுக் கொள்ளு வதற்காக தெரிந்தெடுத்திருக்கிறார். எனவே, நாம் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு அவருக் காகச் சில தீர்மானங்களை எடுப்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் முதலாம் படி.



## கிறிஸ்தவ வாழ்க்கையின் இரண்டாம் படி:

இரண்டாவது படியில், அவரை நம்முடைய தலையாக ஏற்றுக்கொண்டு, அவரில் வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி விசுவாசத்தினால் பெலப்பட வேண்டும். நம்முடைய தரிசனத்திலும், அனுபவத்திலும், பெற்றுக்கொண்ட அறிவிலும் முன்னேற வேண்டும். இந்தத் தேவசெய்தியின் மூலம் தேவனுக்காகப் பெரிய காரியங்களை நீங்கள் செய்து முடிக்க அவர் உங்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கிறார்.

**"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக் குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப் பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர் களாக"** (கொலோசெயர் 2:6,7).

### 1. அவரில் வேர் கொண்டவர்களாயிருங்கள்



கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு மாய்மால மான வெளித்தோற்றமான வாழ்க்கை அல்ல. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, ஒவ்வொரு நாளும் மாற்றமடைந்து, ஒரு செடியைப்போல வளர்ச்சியடைவதான ஒரு வாழ்க்கையாகும். ஒரு செடியை நிலத்தில் நாம் நட்டவுடனே, அது நிலத்திலிருந்து சாரத்தையும், உப்பையும், உரத்தையும், அதற்கு வேண்டிய போஷாக்கு களையும் எடுத்துக்கொண்டு பூரண வளர்ச்சி யடைகிறது. இது போலவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்த வர்கள் அவரில் ஆழமாக வேர்கொண்ட வர்களாயிருக்க வேண்டும்.

எந்த அளவுக்கு கிறிஸ்துவுக்குள் ஆழ மாக, வேர்கொண்டவர்களாக இருக்கிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய போராட் டங்களிலிருந்தும், தோல்விகளிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் விடுதலை பெற முடியும். தேவையான போஷாக்குகளைப் பெற்றுக் கொள்ள ஒரு செடி, ஆழமாக வேரூன்ற வேண்டும். இதைப்போலவே கிறிஸ்துவிடம் நாம் அன்பு செலுத்தி, தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சிபெற, கிறிஸ்துவிலிருந்து அவருடைய நற்பண்புகளை எடுத்துக் கொண்டு அவரது பெலத்தில் வாழவேண்டும். எனவே நாம் கிறிஸ்துவுக்குள் வேர்கொண்டவர்கள் என்று சொல்லும்பொழுது அது சாதாரண கிறிஸ்தவரைவிட ஒரு படி உயர்ந்தது. நாம் தேவனுக்கு முன்பாகக் காத்திருந்து, நம்முடைய நேரத்தை அவருக்காக அதிகமாக செலவிடும்போது, நாம் அவரில் வேரூன்றியிருப்போம்.

அதிக நேரம் வேதாகமத்தை வாசித்து, வேதாகமத்தைக் கனப்படுத்தி, வேதாகமத்தை ஏற்றுக்கொண்டு, வேதம் கூறும் வழிகளில் நாம் நடக்கும்பொழுது, அவரில் வேரூன்றி வாழ்பவராக இருப்போம். நம்முடைய வேதாகமத்தை நாம் கனப்படுத்த வேண்டும். அதை வைப்பதற்கு ஒரு தகுதியான நல்ல இடமிருக்க வேண்டும். நம்முடைய பணத்தை நாம் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கிறோம். **இதைப் போலவே வாசிப்பதற்கும், மற்றவர்களுக்குப் போதிப்பதற்கும், வேதாகமத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.**

கிறிஸ்துவுக்குள் வேரூன்றிய மக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் கூட்டத்தினர் தங்கள் வாழ்க்கையை தேவ னுக்கு ஒப்படைக்கும் மக்கள், இரண்டாம் கூட்டத்தினர் தங்கள் சுயவிருப்பங்களை தேவனுக்கு அர்ப்பணிக்கும் மக்கள். தேவ னுக்குத் தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்த மக்களும், தங்கள் சுய சிந்தனைகளையும், ஆசைகளையும், வாழ்க்கையின் எதிர்காலத் திட்டங்களையும் தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்த மக்களும், இவர்கள் கர்த்தருக்குள் ஆழமாக வேரூன்றிய மக்கள் ஒரு செடி ஒரே இடத்தில் இருக்கும்போது மட்டுமே வளமாக வளர முடியும்.

ஒரு செடியைப் பிடுங்கி, அதன் வேர் களை பரிசோதித்து வேறு ஒரு இடத்தில் அதை

## உங்கள் கவனத்திற்கு

நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை மாதந்தோறும் 17 மொழிகளில் அச்சிடப்பட்டு பல்வேறு இடங்களுக்கு அனுப்பட்டுவருகிறது. தயவு கூர்ந்து உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பெயர், முகவரி, மின் அஞ்சல் முகவரி, கைபேசி எண் ஆகியவற்றை 8ம் பக்கம் இருக்கும் தாளில் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். நாங்கள் நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை அவர்களுக்கு தேவையான மொழியில் ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு பரிசாக அனுப்பி வைப்போம்.

**ஆசிரியர்**
**அழைப்பின் எதிரொலி**
**98412 71858 / 98410 71858**
E.mail : sam@echoofhiscall.org

நடுவோமானால், அதன் வளர்ச்சி குன்றிவிடும். நம்முடைய வாழ்க்கையில், நிரந்தரமாக ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், தேவனை நாம் உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும்.

**“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகுகிறதினாலே மறுரூபமாகுங்கள்”** (ரோமர் 12:1,2).

முதலாவதாக, நீங்கள் ஆண்டவரிடத்தில் வேரூன்றியவர்களாக இருந்தால், உங்கள் சரீரங்களை ஆண்டவருக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள். உங்கள் வாழ்க்கையைப் பூரணமாக ஆண்டவருக்கு ஒப்புக் கொடுங்கள். இரண்டாவதாக, நம்முடைய ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும் இடம் கொடுத்து இந்த உலகத்துக்கு ஒத்த வேஷமிடுபவர்களாக இருக்காதீர்கள். நாம் மற்றவர்களை நம்முடைய மாதிரியாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நாம் இயேசு கிறிஸ்துவை நம் முன் மாதிரியாக வைக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் வேர் கொண்ட ஜீவியம் அப்படிப்பட்ட ஜீவியம். அப்படிச் செய்யும்போது மட்டுமே நாம் கனி கொடுப்பவர்களாக மாறி மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருந்து, செழிப்பான ஒரு வாழ்க்கையை வாழ முடியும்.

நிகழ்கால உலகில், நம்முடைய வாழ்க்கை இயந்திரம் போன்றதாயிருக்கிறது. காலையில் எழுந்து, ஒரு ஜெபத்தை ஏறெடுத்து, மாலையில் வீடு திரும்பி, மறுபடியும் ஒரு ஜெபம் செய்து முடித்து, படுக்கைக்குச் செல்லுகிறோம். வேதத்தை வாசிக்கவோ, ஆராதனை செய்யவோ, தேவனைப் பற்றி நினைக்கவோ நமக்கு நேரமில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து மற்ற நாட்களில் அப்படி வாழவில்லை. இவ்விதமாக வாழ்வது தேவனைப் பிரியப்படுத்தும் ஒரு வாழ்க்கையல்ல. அது வெளியரங்கமான ஒரு வாழ்க்கை. அது மாய்மால வாழ்க்கை. இன்றைய கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையில் திருப்தியடைகிறார்கள். இது போதுமானதல்ல. நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேர்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

வேத நூல்களை வாசிப்பது நல்லதுதான்; ஆனால் அது வேதத்தை வாசிப்பதற்கு ஒரு மாற்றாக இருக்கக்கூடாது. தினசரி வேதவாசிப்பு நூலை எழுதும் ஒருவர், தம்முடைய சொந்த அனுபவத்திலிருந்து எழுதுகிறார். அது அந்த நாளுக்குப் போதுமானதல்ல. அதை மட்டுமே வாசிப்பதால் ஒருவர் ஆவிக்குரிய வளர்ச்சியடைய முடியாது. அப்படிப்பட்ட ஒரு நூலை வாசிப்பதில் அல்லது காலண்டரில் கொடுக்கப்பட்ட ஒரு வசனத்தை அலுவலகத்துக்குச் செல்லுமுன் வாசிப்பதில் பலர் திருப்தி அடைகிறார்கள். வேறு சிலர் வேதாகமத்தின் ஒரு வசனத்தை வாசித்து விட்டு வேதவாசிப்பை முடித்துவிட்டதாய்க் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்ட, ஒரு மாய்மால வாழ்க்கை வாழ்கிறீர்களானால், ஒருநாள் வரும். அன்று நீங்கள் ஏமாற்றமடைவீர்கள். சோதனைக்காரன் வந்து உங்களைச் சோதிக்கும்போது, துன்பங்கள் வந்து உங்களை நெருக்கும் பொழுது, உங்களுக்கு உதவி செய்ய ஆளில்லாமல் தடுமாறும்பொழுது, உங்கள் வாழ்க்கையில் புயலடிக்கும்போது, நீங்கள் ஆண்டவரைத் தேடும்போது, அவரைக் கண்டு கொள்ள மாட்டீர்கள்.

எனவே சூழ்நிலைகள் சாதகமாயிருக்கும்பொழுது அவரில் வேரூன்றியவர்களாக இருக்க வேண்டும். பகல் வேளையில் வசதியான நேரம் உங்களுக்கு இல்லாமலிருக்கலாம். ஆகவே, காலையில் ஒரு நேரத்தில் தேவ சமுகத்திலே அமைதியாக உட்கார்ந்து, ஆண்டவருடைய வசனங்களை வாசித்து, நம் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தப் பழக வேண்டும். “கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்” என்ற வசனத்தை வாசிக்கும்பொழுது இந்தக் கேள்விகளைக் கேளுங்கள். “ஆண்டவருக்குள் நான் ஒரு ஆட்டுக்குட்டியைப் போலிருக்கிறேனா? தேவன் எனக்குக் காட்டிய வழியை நான் பின்பற்றுகிறேனா? அப்படியிருந்தால் நான் கிறிஸ்துவுக்குள் வேரூன்றியவனாயிருக்கிறேன்.”

ஜெபம் செய்ய அனுமதிக்காமல் அல்லது வேதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க அனுமதிக்காமல், சாத்தான் இன்று கிறிஸ்தவர்களைத் தன் கைக்குள் அடக்கி வைத்திருக்கிறான். நீங்கள் தேவனோடு சேர்ந்து வேதாகமத்தை வாசித்து, “கர்த்தாவே! என்னுடைய வாழ்க்கையில் எந்தப் பகுதி மாற்றமடைய வேண்டும் என்று நான் தெரிந்து கொள்ள உதவி செய்யும். என்னுடைய குறைபாடுகள் என்ன? என்னுடைய தவறுகள் என்ன? என்னுடைய பாவங்களை எனக்கு சுட்டிக் காட்டும். நான் முன்னேற வேண்டிய சரியான திசை எது? என் வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகளுக்கு மனுஷன் என்ன சொல்லுகிறான்? உம் வசனம் என்ன சொல்லுகிறது?” ஒரு தேவ ஊழியரைக் காட்டிலும் வேதம் உங்களிடம் மிகத் தெளிவாகப் பேசும்.

**“லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல”** (கொலோசெயர் 2:8).

ஆகவே, உலக மனிதர்களின் தந்திரத்தினாலும், ஞானத்தினாலும் இன்று அநேகருடைய வாழ்க்கை பாழாகிக் கொண்டிருக்கிறது. அதிகாரம் அதிகாரமாக, வசனம் வசனமாக, நீங்கள் ஒழுங்காய் வேதாகமத்தை வாசிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்துவார். உங்களைப்பற்றித் தெரிந்து கொள்ள, யாருடைய உதவியும் உங்களுக்குத் தேவையில்லை; தீர்க்கத்தரிசிகளைத் தேடி எந்த இடத்துக்கும் போக வேண்டிய அவசியமுமில்லை. அவரில் வேரூன்றியிருங்கள். ஏமாற்றப்படாமல் எச்சரிக்கையாயிருங்கள்.

## 2. அவர்மேல் கட்டப்பட்டவர்களாயிருங்கள்



**“... அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும்...”** (கொலோசெயர் 2:6).

தொடர்ச்சி 6-ம் பக்கம்...

**அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்விகள்**

**1. வேதாகமத் தபால் கல்வி**

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும் தமிழ் ஆங்கிலம் இந்திமொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு வயது வரம்பு இல்லை கல்வித் தகுதி தேவையில்லை கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை. இலவச விண்ணப்பப் படிவத்தையும் “புதுவாழ்வு - உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். சான்றிதழ் வழங்கப்படும். இப்பாடத் திட்டம் இந்தியாவில் மட்டும்.

**2. அஞ்சல் வழி இறையியல் கல்வி**

போதகர்களுக்கும் சுவிசேஷகர்களுக்கு மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கும் உபயோகமான ஒன்று! கட்டணம் ரூபாய் 1000/- மட்டுமே!! 142 பகுதிகளைக் கொண்ட 7 புத்தகங்கள் கொடுக்கப்படும்!!!

**“Certificate in Ministry”**

என்ற சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு:

**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,**

10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

செல்: (+91) 98410 71852, 95661 31858

மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும்
**துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2021 ஜீன் 19 முதல் 2021 ஜீலை 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

**ஜுன் 19 :** கடந்த வருடம் 2020ல் (Covid-19) நோயின் பாதிப்பு ஏதும் ஏற்படாது நம்மைக் காத்திட்ட கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுன் 20 :** கடந்த மாதத்தின் செலவுகளை சுமூகமாய் மேற்கொள்ள கிருபை பாராட்டின கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

**ஜுன் 21:** பணித்தளங்களில் செயலாற்றும் நமது ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தையும் பாதுகாத்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுன் 22 :** நமது அலுவலகத்தின் கடந்த மாதத்தின் செயல்பாடுகளுக்காகவும் மற்றும் சகல பரிவர்த்தனை களுக்காகவும் நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுன் 23 :** மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுன் 24 :** நமது **அழைப்பின் எதிரொலி** அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்தையும் பாதுகாத்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுன் 25 :** நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**ஜுன் 26 :** நமது தலைமைச்சபை மற்றும் கிளைச்சபைகளின் போதகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

**ஜுன் 27 :** தேவாதி தேவன் நமது தலைமைச்சபைக்கு உத்வேகமுள்ள விசுவாசிகளை கொடுத்து ஆசீர்வதித்ததற்காக ஸ்தோத்தரிப்போம்.

**ஜுன் 28 :** நமது **சுவிசேஷ அச்சகத்தின்** தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமைசாலிகளான ஊழியர்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுன் 29 :** நமது **St. பால்ஸ் மெட்ரிகுலேஷன்** பள்ளி முதல்வர் ஆசிரியர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுன் 30 :** நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 17 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. அதற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுலை 01 :** நமது BIBLECOR and Theological Correspondence Courses கல்வியில் கூடுதல் மாணவர்களை கர்த்தர் கொடுத்தார், நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுலை 02 :** நமது கடினமான நேரங்களில் எல்லாம் தீமை நம்மை அணுகாதபடி காத்திடும் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜுலை 03 :** நமது தலைமைப்போதகர் **எஸ். சாம் செல்வ ராஜ்** அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாத்து வருகிறார்.

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

**ஜுலை 04 :** நமது இந்த மாதத்தின் செலவுகளை நல்லபடியாக கையாள வேண்டிய கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**ஜுலை 05 :** நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் வளர்ச்சிக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்..

**ஜுலை 06 :** பணிநேரங்களில் நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப்பணியளர்களும் நமது ஸ்தலத்தில் சுகபத்திரமாக தரித்திருக்க கர்த்தரின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்போம்.

**ஜுலை 07 :** நமது **அழைப்பின் எதிரொலியின்** பங்காளர்களுக்காகவும் மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர்களின் நல்வாழ்வுகளுக்காக கர்த்தரிடம் ஜெபிப்போம்.

**ஜுலை 08 :** எல்லாவிதமான ஊழியர்களும் மற்றும் விசுவாசிகளும் ஒற்றுமையுடன் காணப்பட வேண்டி ஜெபிப்போம்.

**ஜுலை 09 :** நமது ஆங்கில இணை ஆசிரியர் சகோ. **M.பால்ராஜ்** அவர்களின் சுகவாழ்வுக்காகவும், நோயின் பாதிப்பிலிருந்து விடுதலை பெறவும் ஜெபிப்போம்.

**ஜுலை 10 :** உலக தேசங்கள் எங்கு சுவிசேஷம் செல்லாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்று ஜனங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுலை 11 :** Covid-19 (கொரோனா வைரஸ்) நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**ஜுலை 12 :** உலக தேசங்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் மற்றும் அமைதியாகவும் வாழ்ந்திட ஜெபிப்போம்.

**ஜுலை 13 :** உலகில் உள்ள அனைத்து திருச்சபைகளிலும் ஒற்றுமை தழைத்தோங்கி காணப்பட கர்த்தரை நேக்கி ஜெபிப்போம்.

**ஜுலை 14 :** நமது நிறுவனத்திற்காகவும், நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

**ஜுலை 15 :** கொடிய நோய்க்கிருமியான கொரோனா வைரஸ் (Covid-19) உலகிலிருந்து முற்றிலுமாக அழிக்கப்படவேண்டி ஜெபிப்போம்.

**ஜுலை 16 :** நமது ஊழியத்தில் சபை உறுப்பினர்கள் மிகுந்த ஈடுபாட்டோடு செயல்பட கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**ஜுலை 17 :** உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக்காக ஜெபிப்போம்.

**ஜுலை 18 :** நமது தலைமைப்போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க தேவனிடத்தில் ஜெபிப்போம்.

.... 4-ம் பக்கத் தொடர்ச்சி

நாம் அவர்மேல் கட்டப்பட்டவர்களாயிருக்க வேண்டும். இசைவிணைப்பாகக் கட்டப்பட்ட ஒரு நகரத்தைப்போல நாம் அவர்மேல் கட்டப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

**“கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி... தேவனை ஸ்தோத்திரியுங்கள்”** (கொலோசெயர் 3:16,17).

நம்மில் எத்தனைபேர் மகிழ்ச்சியுடன் ஆண்டவரைத் துதித்துப் பாடுகிறோம்? நாம் இசைவிணைப்பாய் கட்டப்பட வேண்டும். நம்மைப் பார்க்கும் மக்கள் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்ல வேண்டும். நம்மோடு தொடர்புடைய மக்கள், தேவனுடைய அன்பை நம்மில் காணும்படி நாம் இசைவிணைப்பாய்க் கட்டப்பட்டிருக்கிறோம் என்று கண்டுகொள்ள வேண்டும். தேவனுக்குப் பயப்படும் ஒரு மனிதன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு, மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு, மற்றவர்களுக்கு போதிப்பதற்கு நாம் அவர்மேல் கட்டப்பட வேண்டும். அப்பொழுது நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்போம். இன்றைக்கு அநேக மக்கள் தங்கள் வாழ்க்கையை ஆண்டவர்மேல் கட்டாமல் சுயத்தின்மேல், தங்கள் விருப்பங்களின்மேல் கட்டியிருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய வாழ்வில் எந்த நன்மையுமில்லை. முன்னேற வழியுமில்லை. சரியான நேரத்தில் கட்டப்படுவதில் தவறும்போது நாம் தோல்விகளைச் சந்திக்கிறோம்.

உங்கள் வாழ்க்கையில் துன்பம் ஏற்படும்போது மட்டும் தேவனை நோக்கிப் பார்ப்பது ஆபத்தான காரியம். வாழ்க்கையில் செழித்திருக்கும்போது நீங்கள் தேவனில் அன்புகூர வேண்டும். அப்படிச் செய்யும்போது நீங்கள் அவர்மேல் கட்டப்பட்டிருக்கிறீர்கள். வாழ்க்கையில் சிலருக்கு வசதி வரும்பொழுது அவர்கள் ஆண்டவரை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் சபைக்குச் செல்லுவதை நிறுத்துகிறார்கள். எல்லா வசதிகளும் கிடைத்தபின் நீங்கள் தேவனைப் புறக்கணித்தால், தேவனுடைய கடுங்கோபத்திலிருந்து உங்களை யாரும் விடுவிக்க முடியாது. நம்மால் காண முடியாத ஒரு காரியத்தைச் செய்து முடிக்க ஆண்டவர் நம்மை நியமித்திருக்கிறார் என்பதை நாம் ஒருபொழுதும் மறந்துவிடக் கூடாது. இந்த உலகத்திலுள்ளவை எல்லாம், முற்றிலும் அழிந்துபோகக் கூடியவை. ஆனால் நமக்கு நியமிக்கப்பட்ட காரியம் நித்தியக் காலத்துக்கு மானது. இதை நாம் மறந்துவிடக் கூடாது.

உங்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இருக்கிறது. தேவனுடைய ஆலயம் உங்கள் மேல் கட்டப்படும்படியாக நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்கள் ஊழியப்பணி என்ன ஆயிற்று? சுவிசேஷத்தைப் பரப்பும்படியாகத் தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்தவர்கள், தங்கள் ஊழியங்களிலிருந்து விலகி ஓடுகிறார்கள். அவசியப்பட்ட பொழுது, அவர்கள் தேவனை விசுவாசித்தார்கள். தங்கள் தேவைகள் நிறைவேறியவுடன் தேவப் பணியிலிருந்து அவர்கள் ஓடிப் போனார்கள்.

உங்கள் பிள்ளைகள் உங்களுக்குக் கீழ்ப்படியவில்லை என்று நீங்கள் கவலைப் படுகிறீர்கள். அவர்களின் கீழ்படியாமைக்குக் காரணம் அவர்களின் பெற்றோர்களே. வேதாகமத்தை நீங்கள் மறக்கும்பொழுது, ஆண்டவர் உங்கள் பிள்ளைகளை மறப்பார் என்று வேதம் சொல்லுகிறது. இன்றைக்கு அநேக குடும்பங்களில் உள்ள பிரச்சினை அவர்களுடைய பிள்ளைகளே. உங்கள் பிள்ளை சிறிய குழந்தையாக இருந்தபொழுது, அந்தப் பிள்ளையை கைகளில் ஏந்திக் கொண்டு சபைக்கு கொண்டுவந்தீர்கள்.

இன்று அவர்கள் வளர்ந்தபின்னும் அவர்களை நீங்கள் சபைக்கு அழைத்து வர வேண்டும். உங்கள் குடும்பத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமலிருந்தால், ஏதோ ஒரு தவறு நடந்திருக்கிறது. நீங்கள் தேவனுடைய பிள்ளைகள். உங்கள் பிள்ளைகளை நீங்கள் ஆண்டவருடைய வழியில் வளர்க்க வேண்டும். அப்பொழுது ஆசீர்வாதங்கள் உங்கள் பிள்ளைகளைத் தொடரும்.

## 3. அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளுங்கள்



**“சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும்... வேண்டுதல் செய்கிறோம்”** (கொலோசெயர் 1:10,11).

நீங்கள் தேவனுக்கேற்ற பாத்திரமாய் மாறி அவருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். பாவிகளின் பாதையில் நடவாதிருங்கள். தேவனை அறியும் அறிவில் வளர்ந்து, தேவனுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். தவறான காரியங்கள் நடைபெறும் இடத்துக்குப் போகாதீர்கள். உங்கள் பிள்ளைகளையும் அப்படிப்பட்ட இடத்துக்குப் போக அனுமதிக்காதீர்கள். மீறி போவீர்களானால், உங்களைக் காப்பாற்றும்படி தேவனிடம் கதறும் காலம் வரும். நீங்கள் கதறி அழுவீர்கள். எனவே, தேவன் எச்சரிக்கும்பொழுதே, தேவனோடு நடக்கக் கற்றுக்கொள்ளுங்கள். தேவனோடு இணைந்து செயல்படும் வழக்கத்தைப் பின்பற்றுங்கள். **“துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும் இருப்பவன்... பாக்கியவான்”** என்று சங்கீதம் 1:1 சொல்லுகிறது. கிறிஸ்துவை விசுவாசியாத ஒரு மனிதன் சொல்லுவதைக் கேட்காதீர்கள். நீங்கள் அநியாயக்காரரோடோ, உலகத்தாரோடோ, நடவாமல் கிறிஸ்துவோடு மட்டுமே நடவுங்கள்.



## 4. உங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்

சூழ்நிலைகள் நன்றாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், நாம் விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருக்க வேண்டும். சூழ்நிலைகள் நன்றாயிருக்கும்பொழுது விசுவாசத்தில் உறுதியாயிருப்பது எளிது. ஒரு வேளை அங்கே விசுவாசம் தேவையற்றதாயிருக்கக் கூடும். நடைபெறக்கூடாத காரியம் நடைபெற்ற வேளையில் ஆபிரகாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்தான். அவனுக்கு 99 வயதானபொழுது தேவன் அவனுக்கு ஒரு குமாரனைக் கொடுப்பதாக வாக்களித்தார் (ஆதியாகமம் 18:10). அவன் முறுமுறுக்கவில்லை. அவன் தேவனை முற்றிலுமாக விசுவாசித்தான். தேவன் சொன்னால் அது நடக்கும் என்று அவன் விசுவாசித்தான். உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நிறைவேற்றும்படி ஒருவேளை நீங்கள் தனிமையாக நிற்க வேண்டிய கட்டாயம் வந்தாலும் தைரியமாக நில்லுங்கள்.

இன்றைய நண்பர்கள் நாளைய எதிரிகளாக மாறலாம். ஆகவே, உங்கள் நண்பர்களையோ பணத்தையோ நம்பாதீர்கள். ஆண்டவரை மட்டுமே விசுவாசியுங்கள். உங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள அது ஒன்றே வழியாயிருக்கிறது.

## 5. விசுவாசத்தில் பெருகி இருங்கள்




இனிமேலும் நீங்கள் குழந்தைகள் அல்ல. விசுவாசத்தில் பெருகுங்கள். விசுவாசத்தினால் அசைக்கமுடியாத காரியங்களைச் செய்கிறவர்களாக இருங்கள். பெரிய காரியங்களைச் சாதிக்கிறவர்களாக, நமக்கு விரோதமாக எழும்புகிற தீய சக்திகளை

எதிர்த்து ஜெயிக்கிறவர்களாக விசுவாசத்தில் வல்லவர்களாக இருங்கள். ஆபிரகாமைக் குறித்தும், நோவாவைக் குறித்தும் சொல்லும் பொழுது அவர்கள் விசுவாசத்தில் பெருகிய வர்களாக இருந்தார்கள். அவர்கள் விசுவாசத் தில் வல்லவர்களானார்கள்.

**"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவை களைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்"** (யோவான் 14:12).

ஐந்தாயிரம் மக்களுக்கு ஆகாரமளிக்க தேவனுக்கு இரண்டு மீன்களும் ஐந்து அப்பங் களும் போதுமானது. ஆகவே பணத்தைத் தேடி அலைய வேண்டிய அவசியமில்லை. உங்கள் தேவைகள் சந்திக்கப்படும். நீங்கள் விசுவாசத்தில் பெருகும்பொழுது பெரிய காரியங்களை உங்களால் செய்ய முடியும்.

**"நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ள வில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்"** (யோவான் 15:16).

நீங்கள் தேவனைத் தெரிந்து கொண் டீர்கள் என்று நினைக்காதீர்கள், தேவனை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை, தேவனே உங்களைத் தெரிந்து கொண்டார். ஆகவே விசுவாச வல்லுநர்களாயிருங்கள்.

※※※※※※※※※※※※※※

**"நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை."** (யோசுவா 1:5)

# தனிமையான ஒரு வாழ்க்கை

New Testament "HAND BOOK' - Rev. DICK WOODWARD

"அறியப்படாத ஒரு கிராமத்தில் ஒரு விவசாயப் பெண்மணிக்கு அவர் மகனாகப் பிறந்தார். தமது முப்பதாவது வயதுவரை மரவேலைகள் செய்யும் கடையில் அவர் பணியாற்றி வந்தார். அதற்குப்பின் மூன்று வருடங்களாக தேசமெங்கும் பிரயாணம் செய்து, மக்களோடு நீண்ட நேரம் பேசி, அவர்களது குறைகளைப் பொறுமையோடு கேட்டு தம்மால் முடிந்தவரை அவர்களுக்கு உதவி செய்து வந்தார். அவர் எந்த புத்தகமும் எழுதவில்லை; உலகம் கவனிக்கும் அளவுக்கு எந்த சாதனையும் செய்யவில்லை; எந்த கல்லூரிக்கும் செல்லவில்லை, எந்த ஒரு பொதுப்பணி தேடியும் செல்லவில்லை; குடும்பமில்லை. சொந்த வீடு கூட இருந்ததில்லை. பெருமைக்குரிய கிரியைகளோடு பொதுவாகச் செய்யப்படும் எந்த செயலையும் அவர் செய்யவுமில்லை. அவரைக்குறித்து யாரும் சான்றுரை வழங்காவிட்டாலும் அவர்தாமே அவருக்கு சான்றாக விளங்கினார். அவருக்கு முப்பத்து மூன்று வயதாகும்போது, மக்களின் கருத்து அவருக்கு எதிராய் மாறியது; அவரது உற்ற நண்பர்கள் கூட அவரைத் தள்ளிவிட்டனர். அவர் கைதாகப்பட்டபோதோ, அவரோடு தொடர்பு கொள்ள ஒருவருக்குமே விருப்ப மில்லை. அவர் மேலான விசாரணை முடிந்ததும் அரசாங்கமே அவருக்கு வேறு கொள்ளையர்களோடு சேர்த்து மரண தண்டனை விதித்து அதை நிறைவேற்றியது. பெருந்தன்மையோடு ஒரு நண்பன் தனது கல்லறையை அவருக்குக் கொடுக்க முன்வந்ததால், அவரது சரீரத்தை வைக்க ஒரு இடம் கிடைத்தது. இது 21 நூற்றாண்டு களுக்கு முன் நடந்தபோதிலும், இந்நாளின் மனித இனத்தின் முதன்மையான நபராகவும், அன்பிற்கு மிகச் சிறந்த உதாரணமாகவும் அவர் விளங்குகிறார். இவ்வுலகத்தில் காணப்பட்ட எந்த சேனையும், எந்த கப்பல்படையும், எந்த ஆட்சியாளரும், எந்த ராஜாவும் இந்த தனிமையான வாழ்க்கை நடத்திய நபரைப்போல மனிதனின் வாழ்க்கையைப் பாதித்ததில்லை, என்று ஃபிரட் பாக் என்பவர் இயேசுவைக் குறித்து எழுதியிருக்கிறார்.

ஆவிக்குரிய தலைவர்களோடு அந்நாட்களில் இயேசு வித்தியாசமான உரையாடல்களை நடத்தினார். வேதபாரகரிடத்திலும் பரிசேயரிடத்திலும் அவர் அளித்த போதனை நிச்சயமாக அவர்களைக் கோபத்தில் ஆழ்த்தியிருக்கும். யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பிய ஆயக்காரர்களும், வேசிகளும் தேவனது ராஜ்யத்தில் வேதம் நன்கு அறிந்த பரிசேயர், வேதபாரகர் போன்றவர்களுக்கு முன் சென்று விடுவார்கள் என்று இயேசு கூறினார். இவ்வுலகத்தின் பார்வையில் ஆவிக்குரிய தலைமைப் பதவிகளில் நீங்கள் இருந்த போதிலும் உண்மையிலேயே நீங்கள் தேவனின் திராட்சைத் தோட்டத்தில் பணியாற்றுகிறீர்கள் என்பது கிடையாது. ஏனென்றால் உங்களது கிரியைகள் தேவன் உங்களது ராஜா இல்லை என்பதையும் நீங்கள் அவரது உண்மையான பிரஜைகள் அல்ல என்பதையும் தேவசித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்பட நீங்கள் அவரது பணியைச் செய்யவில்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது என்று இயேசு தைரியமாக அவர்களிடம் பிரசங்கித்தார்.

வெளிப்புறத்தில் பாவிகள்போல தோற்றமளிக்கும் அநேகர், வெளிப்புறத்தில் ஆவிக்குரியவர்கள்போல் தோற்றமளிக்கும் அநேகரைவிட தேவனது ராஜ்யத்திற்கு சமீபமாக இருக்கிறார்கள் என்று அனுபவமிக்க சபைப் போதகர்கள் இந்நாட்களில் அறிவார்கள் என்பது உண்மை.

இயேசுவின் மேற்கூறப்பட்ட போதகம் இன்றைய நாகரீகத்தில் மிகவும் பொருத்தமானதாக உள்ளது. இன்றைய

தொடர்ச்சி 10-ம் பக்கம்...

## எங்கள் சகோதர, சகோதரிகளுக்கு அன்பின் வேண்டுகோள்

நீங்கள் அறிந்தபடி நம் ஊழியங்களுக்குரிய ஊழியர் உதவிகள், அச்சுக் காகிதங்கள், பிரயாணங்கள், அலுவலகச் செலவுகள் போன்ற மிக முக்கியமான அடிப்படைத் தேவைகளை சந்திக்க, நம்மிடம் பணம் இல்லாமல், இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் நெருக்கப்படுகிறோம். பொதுவாக நாம் யாரிடமும் நம் பொருளாதாரத் தேவைகளைக் கேட்பதில்லை. எனவே, இந்த ஊழியங்களை உண்மையாய் நேசிக்கிறவர்கள், உங்களால் இயன்ற காணிக்கைகளை **மணி ஆர்டர், காசோலை, டிமாண்ட் டிராப்ட், NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org), PhonePe (98410 71858), Googlepay (98410 71858), Western Union, MoneyGram** போன்ற ஏதாவது வழிகளில் அனுப்பி உதவ வேண்டுகிறோம். அனுப்பும்போது எங்களுக்குத் தகவல் தெரிவியுங்கள். ஏற்கனவே உதவிசெய்து வருபவர்களுக்கு நன்றி. **தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.**

**"...இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்."**
**நீதிமொழிகள் 17:17**

**- ஆசிரியர், அழைப்பின் எதிரொலி**
98412 71858 / 98410 71858
E.mail : sam@echoofhiscall.org

**இது உங்கள் ஊழியம் ! கர்த்தருடைய நாமம் மகிமைப்பட செய்யுங்கள் !! நமக்கு கூடுதலான வாசகர்கள் தேவை !!!**

தயவு கூர்ந்து உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பெயர், முகவரி, மின் அஞ்சல் முகவரி, கைபேசி எண் ஆகியவற்றை கீழே எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். நாங்கள் நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிக்கையை ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு பரிசாக அனுப்பி வைப்போம்.

1. ____________________________________________

____________________________________________

2. ____________________________________________

____________________________________________

3. ____________________________________________

____________________________________________

4. ____________________________________________

____________________________________________

5. ____________________________________________

____________________________________________

6. ____________________________________________

____________________________________________

7. ____________________________________________

____________________________________________

8. ____________________________________________

____________________________________________


# நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், (Estd.:1992) சென்னை

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள் (Estd.:1969)

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

**மாலை நேர வகுப்புகள் – சேப்பாக்கம் மற்றும் சந்தோஷபுரம் – இறையியல் டிப்ளோமா** (Diploma in Theology) (திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை)

**கல்வித் தகுதி** 10–ம் வகுப்பு மற்றும் அதற்குமேல் **போதனா மொழி :** தமிழ்

ஒரு வருட **Certificate in Theology** மற்றும் இரண்டு வருட **Diploma in Theology**

**முழு நேர வகுப்புகள் – வேளச்சேரி இறையியல் டிப்ளோமா**

**Diploma in Theology பயிற்சிக் காலத்தில்** களப்பயிற்சிகளும், நிர்வாகப் பயிற்சிகளும் உண்டு **கல்வித் தகுதி :** 10–ம் வகுப்பு மற்றும் அதற்குமேல் **போதனா மொழி :** இந்தி மற்றும் ஆங்கிலம்

**ஆரம்பநாள் : 01-08-2021**

**உடனே அணுகவும் : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்,**
நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், **அழைப்பின் எதிரொலி,**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
போன்: (+91–44) 2852 8282, 2852 9293 செல்: (+91) 98410 71852, 95661 31858
E-mail: sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in Websites: www.echoofhiscall.org / www.echoofhiscall.com



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

**தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்!**

**“வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்” (மத்தேயு 10:8).**

சமீபத்தில், கிறிஸ்தவரல்லாத ஒரு இளம் வாலிபர், தனது 40 வயதான தாயார் வெகு காலமாய்க் கொடிய வியாதிப்பட்டு இருப்பதாகவும், அவர்களது மத நம்பிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பல முயற்சிகளும், மருத்துவ முயற்சிகளும் வீணாகிவிட்டதாகவும் என்னைச் சந்தித்து கூறினார். மேலும் இப்பொழுது மருத்துவர்களும் அந்த சகோதரியைக் கைவிட்டுவிட்டனர். ஏனென்றால் இதுவரை அவர்கள் கொடுத்து வந்த எந்த மருந்தும் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை. இனிமேலும் பணம் செலவுசெய்ய அவர்களால் முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார். அந்த வாலிப மகன், நான் அவரோடு மருத்துவமனைக்குச் சென்று அவரது தாயாருக்காக ஜெபிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

நான் அங்கு செல்ல நேரம் ஒதுக்கிக் கடந்து சென்றேன். அவர்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்ததால், அந்த சகோதரி இருந்த அறைக்குள் யாரையும் அனுமதிக்க மருத்துவமனை ஊழியர்கள் மறுத்துவிட்டனர். எனவே ஆலயத்திற்கு வந்து அவர்களுக்காக ஜெபிப்பதாக வாக்களித்தேன். ஆனால் அந்த சகோதரியின் உறவினர்கள், சிறு குழந்தையைப் போல அழுது, நான் அந்த இடத்திலேயே நின்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் இரக்கம் கேட்டு, கர்த்தர் பரலோகத்திலிருந்து விசேஷமாய் அந்த சகோதரியைத்தொட்டு சுகமாக்க ஜெபிக்க வேண்டும் எனக் கெஞ்சினர்.

எனவே, நான் அவர்கள் வேண்டுகோளுக்குச் சம்மதித்து, அவர்கள் அனைவரையும் அங்கு ஓரிடத்தில் கூடிவரச் செய்து, தேவனிடத்திலிருந்து நான் தைரியத்தைக் கேட்டு பெற்றுக் கொண்டு; மனித வாழ்க்கையில் கஷ்டங்கள், பிரச்சினைகள், ஆபத்துகள் ஆகியவை எதிர்ப்பாராமல் வரும்போது, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எவ்வாறு தலையிட்டு அவற்றை நீக்குகிறார் என்று அவர்களுக்கு விளக்கிக் கூறினேன். பின்பு, நாங்கள் அனைவரும் இணைந்து அந்த சகோதரியின் சுகத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தோம். எங்கள் ஜெபம் முடிந்து எங்கள் கண்களைத் திறந்தபோது, ஒரு மனிதர், சில மருத்துவ உதவியாளர்களுடன் எங்களை நோக்கி வருவதைக் கண்டேன். அவர் வந்து என் கைகளைக் குலுக்கி, 15 வருடங்களுக்கு முன் தனது மகன் ஒரு வியாதியில் அவதிப்பட்டுக்கொண்டிருந்தபோது நான் அவனுக்காக ஜெபித்ததும், அவன் அந்த விநோதமான வியாதியிலிருந்து விடுதலையானதையும் நினைவுப் படுத்தினார். மேலும் நான் ஏன் அங்கு ஒரு கூட்ட மக்களுடன் நின்று கொண்டிருக்கிறேன் என விசாரித்தார்.

அப்பொழுது, தன் ஜீவனுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்த அந்த சகோதரியின் உடனடித் தேவையைக் குறித்து அவரிடம் விளக்கினேன். அதற்கு அவர், “சகோதரர் சாம், இந்தத் துறையின் முதன்மை மருத்துவர் நான்தான். நீங்கள் குறிப்பிடும் நோயாளியும் என் கீழ் பணி செய்யும் மருத்துவர்களின் பராமரிப்பில்தான் இருக்கிறார்கள். நான் இப்பொழுதே அங்குச் சென்று அந்த நோயாளியைப் பரிசோதித்து, சரியான மருத்துவ உதவி அவர்களுக்குக் கிடைக்கும்படிக்கும் அவர்கள் உடனேயே குணமாகவும் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறேன்,” என்றார். மேலும் நான் அங்கிருந்து நம்பிக்கையுடன் செல்லலாம் என்றும் சொன்னார்.

சில நாட்கள் கழித்து அந்த சகோதரியின் உறவினர்கள் சந்தோஷமான செய்தியுடன் என்னைக் காண வந்தார்கள். அவர்களுக்கு ஒரு அறுவைசிகிச்சை வெற்றிகரமாக நடந்தது என்றும், அதன் பின் நல்ல கவனிப்புடன் மருத்துவம் பார்க்கப்பட்டு இப்பொழுது அவர்கள் சுகமாகிவிட்டதாகவும் கூறினார்கள். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு சரியான நபரை அனுப்பி, சரியான மருத்துவ உதவி கிடைக்க அருள் செய்தார். நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அந்த சகோதரிக்குக் கிடைத்த நல்ல சுகத்தினால் அந்த குடும்பம் ஆண்டவருக்கு உண்மையுடனும், நன்றியுடனும் இருக்கிறார்கள்.

அன்பு வாசகரே, இதே தேவன் உங்களுக்கும் விடுதலை கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். அவரிடத்தில் உங்கள் வழிகளை ஒப்புவித்து, அவரை உங்கள் ஆண்டவரும், இரட்சகருமாய் ஏற்று அறிக்கை செய்யுங்கள். உங்களைத் திக்கற்றவனாக விடாதபடி, அவர் உங்களிடத்தில் நிச்சயமாய் வந்து, உங்களைப் பராமரித்துக்கொள்வார். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

“எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்... (சங். 107:43).”

## OUR BANK DETAILS:

| | |
|---|---|
| NAME : **S. Sam Selva Raj** | NAME : **Echo of His Call** |
| A/C No.: **102329 34679** | A/C No.: **60380 5022319** |
| BANK : **State Bank of India** | BANK : **ICICI Bank** |
| BRANCH : **Triplicane, Chennai-5.** | BRANCH : **Anna Salai, Chennai -2.** |
| IFSC CODE No. : **SBIN 0000249** | IFSC CODE No. : **ICIC 0006038** |
| SWIFT CODE No.: **SBI NIN BB 455** | **Google Pay : 98410 71858** |

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

.... 7-ம் பக்கத் தொடர்ச்சி

உலகில் கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்கள் வழங்கும் பட்டங்களுக்கு அதிக மதிப்பு கொடுக்கப்படுகிறது. இத்தகைய பட்டங்களுக்கு இயேசு எதிர்ப்பு தெரிவிக்க வில்லை; ஆனால் இப்பட்டங்கள் ஒருவருக்கு உண்மையான தகுதியை அளிப்பதில்லை என்றுதான் குறிப்பிடுகிறார். நமது கிரியைகள்தான் நமக்கு உண்மையான தகுதியைக் கொடுக்கிறது. ஒரு நல்ல விண்ணப்பத்தில் பட்டங்கள், கல்வித்தகுதியின் பட்டியல் ஆகியவை இருப்பினும், தொழில் அனுபவத்தின் பட்டியல் மிகவும் அவசியம். இக்காலத்திலுள்ள ஸ்தாபன கிறிஸ்தவமும் ஒரு மனிதனுடைய விசுவாச மார்க்கம், இறையியல் கொள்கை போன்றவைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. உண்மையிலேயே நீங்கள் இருக்கும் சபையின் கொள்கைகளை நீங்களே ஏற்றுக்கொண்டு தீர்மானம் எடுத்துதான் அதில் அங்கத்தினராக இருக்கிறீர்களா? நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்கள் என்றும், சபையில் பிறர் விசுவாசிப்பதில் உங்களுக்கு கருத்து வேறுபாடு எதுவும் உண்டோ என்று ஆலோசித்தது உண்டா? இறையியலின் இறுதி பரீட்சைதான் நீயாயத்தீர்ப்பு என்று சில விசுவாசிகள் கருதுகின்றனர். ஆனால் நியாயத்தீர்ப்பின் நாளில் முக்கியமாக இடம் பெறப்போவது என்னவென்றால் "நீங்கள் பசித்தவனுக்கு ஆகாரம் கொடுத்ததுண்டா? வியாதியஸ்தர்களையும், சிறையாக்கப் பட்டவர்களையும் சந்தித்து ஆறுதல் சொன்னதுண்டா? தனிமையாக்கப்பட்ட வரைத் தாங்கினதுண்டா? உடுக்க உடை யில்லாதவனுக்கு உடை கொடுத்தும், தாகமாய் வந்தவனுக்கு தண்ணீர் கொடுத்ததுமுண்டா?" என்ற கேள்விகள்தான் (மத்தேயு 25). மலைப்பிரசங்கத்தில் நியாயத்தீர்ப்பின் நேரத்தில், "கர்த்தாவே, கர்த்தாவே" என்று அழைக்கும் பலரை தேவன் அவரைவிட்டு அகன்று போகும்படியாகக் கட்டளையிடுவார் என்று இயேசு குறிப்பிட்டுள்ளார். ஏனென்றால் அவர்கள் தேவசித்தம் செய்யாதவர்கள். தாங்கள் செய்யும் பிரசங்கத்தின்படி வாழ்ந்து காட்டாதவர்கள், அஸ்திபாரம் இல்லாமல் கட்டப்படும் வீட்டிற்கு ஒப்பாவார்கள் என்றும், தாங்கள் செய்யும் பிரசங்கத்தின்படி வாழ்பவர்கள் கற்பாறையின்மேல் கட்டப்பட்டு, புயலுக்கும், மழைக்கும் சேதம் வராத வீட்டிற்கு ஒப்பானவர்கள் என்றும் கூறி இயேசு தமது மலைப்பிரசங்கத்தை முடித்தார்.

இயேசு மிகச்சிறந்த போதகராவார். போதித்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவர் அவர். சுவிசேஷ புத்தகங்களில் மூன்றில் ஒரு பங்கு அவரது போதகமாகும். நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பது மிகவும் முக்கியம் என்று அவர் வலியுறுத்துகிறார். தேவராஜ்யத்தைக்குறித்து அறிவிக்கும் பணிக்கு இயேசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். இருப்பினும், அவ்வாறு அறிவிப்பது மட்டுமில்லாமல் அதன்படி வாழாவிட்டால் மாறுபாடான சூழ்நிலை ஏற்படும் என்றும் வலியுறுத்துகிறார்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖


## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள்,
தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில
உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், சமூக சேவைகள்**

**வருட சந்தா ரூ. 100/–** **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்கள் மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்குத் தேவை.

☞ உங்கள் விலாசம் மாறினால் உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அழைப்பின் எதிரொலி பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் அழைப்பின் எதிரொலி பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) மூலம் Echo of His Call என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது அழைப்பின் எதிரொலி பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293 செல்: (+91) 98410 71852, 95661 31858

E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in / Websites : www.echoofhiscall.org / www.echoofhiscall.com

**YOU CAN SEND YOUR DONATIONS ON ONLINE ALSO**



Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH © /197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th MAY 2021



If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from 18, Mohammed Abdullah Sahib Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** 18, Mohammed Abdullah Sahib Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**